SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

# AA2 பரீட்சை - ஜனவரி 2018

**(January 2018 Examination - AA2 Level)**

வினாக்களும் விதந்துரைக்கப்பட்ட விடைகளும்

பாட இலக்கம் **: AA25**

# வியாபாரச் சட்டமும் ஒழுக்கநெறியும்
# (BLE)


இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாஹிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05

தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் ஒரு வெளியீடு**

# இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

## AA2 பரீட்சை – ஜனவரி 2018

## (AA25) வியாபார சட்டமும் ஒழுக்கநெறியும்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பகுதி - A**

**குறுநோக்கு வினாக்களுக்கான விடைகள் (OTQs)**

**பத்து (10) கட்டாய வினாக்கள்.**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

### வினா 01ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

| வினா | விடைகள் |
|---|---|
| 1.1 | (3) |
| 1.2 | (1) |
| 1.3 | (2) |
| 1.4 | (4) |
| 1.5 | (4) |
| 1.6 | (3) |
| 1.7 | (3) |

1.8 தேசவழமை சட்டம்.

கண்டிய சட்டம்.

இஸ்லாமிய முஸ்லிம் சட்டம்.

1.9

- பிணைகளின் சந்தையின் அபிவிருத்திக்காக அரசிற்கு ஆலோசனை வழங்குதல்.
- பட்டியல்படுத்தலையும் பிணை வழங்களையும் ஒழுங்குபடுத்தல்.
- உரிமம் பெற்ற பிணை பரிமாற்று நிறுவனங்கள், முகவா்கள், விநியோகஸ்தா்கள், கம்பனி, நம்பிக்கை பொறுப்பாளா், இடையீட்டாளா் ஆகிய தரப்பினரின் நடத்தை தொடா்பிலான விசாரனைகளில் ஈடுபடல்.
- பிணைகள் சந்தை தெடா்பான அரசின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்.

1.10 - நுகர்வோரின் உயிருக்கும் உடமைகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் பொருட்கள் சேவைகளின் விற்பனையிலிருந்து நுகர்வோரை பாதுகாத்தல்.

- முறையற்ற வணிக நடவடிக்கைகளை தடுப்பதனூடாக நுகர்வோர் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- எல்லா சந்தர்ப்பங்களிலும் போட்டி விலையில் பொருட்கள் சேவைகளை நுகர்வதற்கான வாய்ப்பை நுக்ர்வோருக்கு ஏற்படுத்தல்.
- முறையற்ற வணிக நடவடிக்கைகளால் பாதிக்கப்படும் நுகர்வோருக்கு நட்டஈட்டை பெற்று கொடுத்தல்.

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

aat SRI LANKA

**பிரிவு *A* இன் நிறைவு**

**பகுதி - B**

**05 கட்டாய வினாக்கள்**
**(மொத்தம் 25 புள்ளிகள்)**

## வினா 02ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

விபரணத்தின் அடிப்படையிலான பொருள் விற்பனை ஒப்பந்தமொன்றில் சிறிபால மற்றும் துமிந்த ஈடுபட்டுள்ளனர்

விபரணத்தின் அடிப்படையிலான பொருள் விற்பனை ஒப்பந்தமொன்று காணப்படும் பட்சத்தில், இதனடிப்படையிலான உட்கிடையான நிபந்தனைகளில் ஒன்று விபரணத்தில் காணப்படும் வகையிலேயே பொருட்கள் காணப்பட வேண்டும் என்பதாகும்.

- *Beal Vs. Taylor*
- *Moore and Landauer (1921)*
- *Harrison Vs. Knowles and Faster (1918)*

இங்கு சிறிபால 'Madalzoo' என விவரணப்படுத்தி உள்ளடக்கி விளம்பரப்படுத்தியிருந்தார் மேலும் காரின் பலகையிலும் 'Madalzoo' என அச்சிடப்பட்டிருந்தது.

இந்த விவரணத்தை முழுமையாக நம்பி துமிந்த காரினை கொள்வனவு செய்தார். ஆகவே குறித்த கார் விவரணத்திற்கு மாறாக இருக்குமாயின், மேற்கூறிய உட்கிடையான நிபந்தனையை அது மீறுவதாக அமையும்.

ஆகவே பாதிக்கப்பட்ட நிறத்தவரான துமிந்த ஒப்பந்தத்தை மறுக்க முடியும் என்பதோடு சிறிபாலவிடமிறுந்து நட்டஈட்டையும் பெறமுடியும்.

**(5 புள்ளிகள்)**

## வினா 03ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

மாற்றுண்டியல் கட்டளை சட்டத்திற்கு அமைவாக காசோலை என்பது கேட்கும்போது கோரும்போது பணம் செலுத்தும்படி வங்கிக்கு மேற்கொள்ளப்படும் கட்டளையாகும்.

ஒரு உண்டியலுக்கு கேட்கும்போது பணம் செலுத்தப்பட வேண்டுமாயின் அது நியாயமான காலப்பகுதியில் பொடுப்பனவிற்கு சமா்பிக்கப்பட வேண்டும்.

நன்கு பரிச்சயமான தொடா்ந்து பின்பற்றப்படுகின்ற வங்கி கொடுக்கல் வாங்கல் நடைமுறையின் அடிப்படை காசோலையொன்று காசோலையில் குறிப்பிடப்பட்டிருந்த திகதியிலிருந்து 6 மாதத்திற்குள் கொடுப்பனவிற்காக சமா்பிக்கப்பட வேண்டும்.

ஆகவே 6 மாதத்தை கடந்த காசோலைகள் காலங்கடந்த காசோலைகளாக கருதப்படும்.

இக் குறிப்பிட்ட நிகழ்வில் சுனில் என்பவருக்கு வழங்கப்பட்ட காசோலையில் 01 ஏப்பிரல் 2017 என திகதியிடப்பட்டிருந்தது. ஆயினும் சுனில் 15 டிசம்பா் 2017 அன்று வங்கிக்கு சென்று காசோலையினை காசாக்க முனைந்தாா். இங்கு சுனில் இக்காசோலைக்கு வங்கியிடம் பணம் பெற முடியாது. காரணம் இக் காசோலை 6 மாதத்தை கடந்துள்ளமை ஆகும்.

**(5 புள்ளிகள்)**

## வினா 04ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

இது காப்புறுதி சட்டத்தை மையப்படுத்திய விடயமாகும். இங்கு எலிஸ் என்பவறுக்கு தன்னுடைய சகோதரியின் ஆயுளின் மீது காப்புறுத்தும் உரிமை உள்ளதா என்பதே கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

ஒரு காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றினை நிறைவேற்ற காப்புறுதி செய்யும் உரிமை காணப்படல் வேண்டும். அவ்வாறு இல்லையெனில் அக்காப்புறுதி ஒப்பந்தம் வலிதாகாது.

ஆயுழுறுதி ஆயள்காப்புறுதியை பொறுத்தமட்டில் ஒரு நபர் மற்றுமொரு நபரின் ஆயுளின் மீது காப்புறுதி செய்ய விரும்புவதாயின் அவர், தான் காப்புறுதி செய்ய விரும்புவரது மரணம் நிகழுமாயின் தமக்கு பொருளாதார ரீதியான அளவிடக்கூடிய இழப்பு ஏற்படும் என்பதை காட்டுதல் வேண்டும்.

ஆகவே தன்னுடைய சகோதரியின் ஆயுளை காப்புறுத்துவதற்கான உரிமை ஒருவருக்கு இல்லை.

***Evans Vs. Crooks (1911)***

ஆகவே எலிஸ் என்பவருக்கு தன்னுடைய சகோதரியின் ஆயுளின் மீது காப்புறுதி செய்ய முடியாது, எனவே Safe Line காப்புறுதி நிறுவனம் எலிஸ் வழங்கிய தன்னுடைய சகோதரி தொடர்பிலான காப்புறுதி விண்ணப்பத்தை ஏற்க முடியாது.

**(5 புள்ளிகள்)**

## வினா 05ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**The Bill of Lading**

ஒரு சுமைசீடட்டானது ஒரு ஏற்றுமதியாளரிடமிறுந்து பொருட்கள் கப்பலில் பெற்றுக்கொள்ளப்பட்டதையும் ஒரு துறைமுகத்திலிருந்து மற்றுமொரு துறைமுகத்திற்கு அப்பொருட்கள் அனுப்பட்டதையும் உறுதி செய்து வழங்கப்பட்டதாகும்.

ஒரு சுமைச்சீட்டானது 4 தொழிற்பாடுகளை கருமங்களை மேற்கொள்ளும்.

I) இது கப்பல் கம்பனியால் ஏற்றுமதியாளருக்கு வழங்கப்படும் ஒரு பற்றுச்சீட்டாக தொழிற்படும். பொதுவாக ஒரு சுமைச்சீட்டில் பொருட்களின் அளவு மற்றும் தலம் காட்டப்பட்டிறுக்கும்.

II) இது ஏற்றுமதியாளருக்கும் கப்பல் கம்பனிக்கும் இடைளிலான பொருட்களை கொண்டு செல்லும் போக்குவருத்து ஒப்பந்தத்திற்கான சான்றாக அமையும். பொதுவாக உண்டியலை வழங்க முன்னர் கட்சியினர் ஒபடபந்தத்தில் ஈடுபடுவர். ஆகவே சுமைச்சீட்டே கப்பல் கம்பனிக்கும் ஏற்றுபவருக்குமிடையிலான போக்குவரத்து உடன்படிக்கை தொடர்பான ஒரே ஒரு சான்றாகும். ஒப்பந்தத்தின் வாசகங்கள் பொதுவாக ஆவணங்களின் பின்புறம் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

III) கப்பல்படுத்திய பொருட்களின் உரிமையை தீர்மானிக்கின்ற ஆவணமாக சுமைச்சீட்டு செயற்படும். சுமைச்சீட்டு (உண்மை பிரதி) சமர்ப்பிக்கப்கடும் பட்சத்திலேயே பொருட்கள் வழங்கப்படும்.

IV) இறக்குமதி பொருட்களுக்கு ஏதேனும் சேதங்கள் ஏற்ப்பட்டிருப்பின் அதற்கான நட்டஈட்டை பெற சுமைச்சீட்டு பயன்படுத்தப்படும்.

**(5 புள்ளிகள்)**

## வினா 06ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**(இரண்டு / விவேக / புலமை நுண்ணறிவுச் சொத்தை தெளிவு படுத்தல் போதுமானது)**

(1) **பதிப்புரிமை (Copyright)**

ஒருவரின் உண்மையான தனிப்பட்ட வேலைகளுக்கு கருமங்களின் படைப்பாளிகளை பாதுகாப்பதாகும். இங்கு பதிப்புரிமையின் கீழ் ஒருவரின் எண்ணங்கள் தவிர்த்த மொழிப்பெயர்ப்பு விடயங்களும் கூட பாதுகாப்பை பெற முடியும்.

இதன் கீழ் இலக்கியம், கலை, விஞ்ஞான படைப்புகள் என்பன உள்ளடங்கும்.

உ+ம் :-
- இலக்கியம், பேச்சு, நூல்கள் என்பன.
- கலை நயம்மிக்க படைப்புகள் (கட்டிடக்கலை மற்றும் வரைபடத்தின்)
- விஞ்ஞான ரீதியான படைப்புகள்.

(2) **குறிகள் (வியாபாரக்குறி)**

போட்டிப்பொருட்களிருந்து குறித்த பொருளை தனித்து வேறுபடுத்தி காட்டுவதற்காக பயன்படுத்தப்படும் ஏதேனும் கட்புலனாகும் குறி வியாபாரக்குறி / குறியீடு எனப்படும். இது ஒரு வார்த்தை, ஒரு சொற்றொடர், எழுத்துகளின் தொகுதி / ஒரு குறியீடு ஒரு வரைபடம் அல்லது இவை அனைத்தினதும் சேர்க்கையாக இருக்கலாம்.

பொருட்களோடு தொடர்புடையது வியாபாரக்குறி என்பதோடு சேவைகளோடு தொடர்புடையது ஆக்கவுரிமை.

(3) **ஆக்கவுரிமை**

ஒரு கண்டுபிடிப்பாளருக்கு தனது கண்டுபிடிப்புகளுக்கு பெறக்கூடிய உரித்து இதுவாகும். கண்டுபிடிப்புகள் என்பது,

- புதிய கண்டுபிடிப்பு
- புதிய கண்டுபிடிப்புக்கான படிமுறை
- கைத்தொழில் பிரயோகங்கள்

தொழிநுட்பசூழலில் நிலவும் பிரச்சனைகளுக்கான தீர்வு கண்டுபிடிப்புகளாகும், இது ஒரு உற்பத்தியோடோ அல்லது ஒரு செயன்முறையோடு தொடர்புபடுவதற்கும், ஆக்கவுரிமையை அரசிடமிருந்து பெறும் ஒருவருக்கு 20 ஆண்டுகள் ஆக்கவுரிமையை பெறமுடியும்.

ஆக்கவுரிமையானது ஒரு புதிய / தனிப்பட்ட கண்டுபிடிப்பை அனுமதியின்றி பயனடபடுத்தல், விற்பனை செய்தல் போன்றவற்றை தடுக்கின்றது. ஆக்கவுரிமை கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவிப்பதோடு, ஆராய்ச்சி அபிலிருத்தி கருமங்களை விரிவடையச் செய்கின்றது.

**(4) வியாபாரப்பெயர்**

ஒரு சட்ட பிரஜை அல்லது ஒரு இயற்கை பிரஜையின் பதவி அல்லது வியாபார முயற்சியின் பெயர்கள் வியாபாரப்பெயர் என அழைக்கப்படும். இவையும் பதிவு செய்யப்பட்டு பாதுகாப்பை பெற முடியும். ஆயினும் ஒரு மதத்தை இழிவுபடுத்துகின்ற ஒரு நாட்டின் ஒழுக்கத்திற்கு முரணான, இனமுரண்பாட்டை ஏற்படுத்துகின்ற பெயர்களை பதிவு செய்ய முடியாது.

**(5) கைத்தொழில் வடிவமைப்பு**

இது ஏதேனும் கலைநயம் மிக்க ஒரு படைப்பு அல்லது கண்டுபிடிப்புகள், இது புதிய கண்டுபிடிப்புகளாயின் மாத்திரமே பெற முடியும். பொது மக்களுக்கு பாவனைக்கு வழங்கப்பாத வரை அது புதிதாக கருதப்படும்.

(6) **புவியியல் குறிகாட்டிகள்**

இது ஒரு குறிப்பிட்ட உற்பத்தி / பொருள் எந்த ஆட்புல எல்லைக்குட்பட்டது / எந்த நாட்டிற்குட்பட்டது / எந்த வலயத்திற்கு / எந்த தேசத்திற்குட்பட்டது என்பதை காட்டுவதாகும். இங்கு குறிப்பிட்ட உற்பத்தியின் தரம், பண்பு, பிரபல்யதன்மை என்வை குறிப்பிட்ட புவியியல் பிரதேசத்திற்குரியது என்பதை தனித்துவப்படுத்தி காட்டுவதே இதன் நோக்கமாகும். அடிப்படைளில் புவியியல் குறிகாட்டி என்பது ஒரு பொருள் குறிப்பிட்ட பிரதேசத்தில் இருப்பதால் அது விசேட தரம், பண்பு, பிரபயல்யத்தன்மை கொண்டுள்ளது காடடுவதாகும்.

உ+ம் :- இலங்கை தேயிலை

சுவிஸ் சொக்கலேட்டு

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

**பிரிவு *B* இன் நிறைவு**

**பகுதி - C**

**03 கட்டாய வினாக்கள்**

**(மொத்தம் 30 புள்ளிகள்)**

## வினா 07ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

இது ஒப்பந்த சட்டத்தோடு தொடர்புடைய ஒரு விடயமாகும். அசேன் மற்றும் குறித்த Automobile Lanka Ltd ஒரு காரினை வாடகைக்கு பெறுதல் தொடர்பிலான ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இங்கு இவ்வரு திறத்தவர்க்கும் இடையில் ஒரு வலிதான ஒப்பந்தம் காணப்படுகின்றது.

அசேன் ஏற்கனவே தனது தேவைப்பாடுகளை குறிப்பாக கூறி கார் ஒன்றை முன்பதிவு செய்துள்ளார். இவர் 5 பேர் பயணம் செய்யக்கூடிய கார் ஒன்றை முன்பதிவு செய்திருந்த போதிலும் 2 பேர் மாத்திரம் பயணம் செய்யக்கூடிய விளையாட்டுக்கார் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே குறித்த கம்பனி வெளிப்படையான நிபந்தனைகளை / ஒப்பந்த வாசகங்களை மீறியுள்ளமை தெளிவாகிறது.

ஆகவே ஒப்பந்த மீறலுக்காக நிவாரணத்தை பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமை அசேன் என்பவருக்கு உண்டு.

இந்நிகழ்வின் விடயங்களை அவதானிக்கும்போது அசேன் குறித்த கம்பனியிடமிருந்து நட்டஈட்டை பெற்றுக்கொள்ள முடியும். இழப்பீடு அல்லது நட்டஈடு என்பது ஒப்பந்த மீறலினால் பாதிக்கப்பட்ட திறத்தவர் பெற்றுக் கொள்ளக்கூடியதாகும். இதன் நோக்கம் ஒப்பந்தத்தில் ஈடுபட முன்னர் இருந்த நிலைக்கு குறித்த பாதிக்கப்பட்ட திறத்தவரை கொண்டு வருதல் ஆகும்.

ஆகவே அசேன் இவ் ஒப்பந்த மீறலால் சாதாரண வணிக நடவடிக்கைகளில் ஏற்படக்கூடிய நட்டம் எத்தகையதோ அதன் அடிப்படையிலான தனது நட்டஈட்டை கனிக்குமாறு நீதிமன்றத்திடம் கோர முடியம்.

இங்கு எற்பட்டுள்ள ஒப்பந்த மீறலினால் அசேன் தனது முழு பயண ஒப்பந்தையும் இல்லாதொழித்தல் வேண்டும். இது அசேனுக்கு பாரிய நட்டத்தை ஏற்படுத்தும். இங்கு அசேன் தனது பயண ஒப்பந்தத்தை இழந்தமைக்கு சேர்த்து ஒரு மொத்தமான நட்டஈட்டை கோர முடியும்.

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

## வினா 08ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

தொழிற்கான ஒப்பந்தம் என்பது ஒரு தொழில்தருனருக்கு கீழ் தொழிலாளர் ஒருவர் பணியாற்றுவதாகும். ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் தொழில் தருனருக்காக குறிப்பிட்ட கருமத்தை செய்யும் போது அதனை ஒரு சுயாதீன ஒப்பந்தக்காரர் என கூற முடியும்.

சுனிமல் ஒரு தனியார் கம்பனியில் தம்ரோ கம்பனியில் பணிபுரிந்தமை அவர் ஒரு ஊழியரா அல்லது ஒப்பந்தக்காரரா என தீர்மானித்தல் வேண்டும்.

இதனை தீர்மானிப்பதற்கு பரிசீலனைகள் 04 காணப்படுகின்றது.

- கட்டுப்பாட்டு பரிசோதனை
- உபகரண பரிசோதனை
- ஒன்றிணைக்கப்பட்ட பரிசோதனை
- பொருளாதார உள்ளக நிலை பரிசோதனை

**கட்டுப்பாட்டு பரிசோதனை**

ஒரு ஊழியர் தொடர்பில் அவரது வருகை நேரம் தேநீர் இடைவேளை மதிய நேர உணவு இடைவேளை தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முடியுமாயின் அவர் இந் நிறுவனத்தின் ஊழியர் ஆவார்.இங்கு சுனிமல் தான் விரும்பிய காலை, இரவு நேரங்களில் பணியாற்ற முடியும் என்பதாலும் இவருக்கு மணித்தியால அடிப்படையில் கொடுப்பனவு கொடுப்பதாலும் இவர் சுயாதீன ஒப்பந்தக்காரர் ஆகின்றார்.

**உபகரணப்பரிசோதனை**

தொழில்தருனர் தொழிலாளருக்காக உபகரணங்களை வழங்குவாறாயின் அவர் ஒரு தொழிலாளர் ஆவார். ஆயினும் இந் நிகழ்வில் சுனிமல் தனது சொந்த உபகரணங்களை சமையலறைக்கு எடுத்து வந்துள்ளார். ஆகவே இவர் தொழிலாளர் அல்ல.

ஆகவே மேற் காட்டியவாறு சுனிமல் ஒரு சுயாதீன ஒப்பந்தக்காரர் ஆவார்.

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 09ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) விமலுடன் ஏற்படுத்திக்கொண்ட அதே ஒப்பந்தத்தை பயன்படுத்தி தனது மனைவியுடன் அதே போன்றதொரு வணிகத்தை ஆரம்பித்தார். பங்குடைமை கட்டளைச்சட்டத்தின் படி பங்காளர்களின் கடமைகளில் ஒன்று போட்டி வணிகமொன்றை பங்காளர்கள் அனைவரினதும் சம்மதமின்றி

ஆரம்பிக்க முடியாது. அவ்வாறு ஆரம்பிக்கும் போது அவர் அத்தகைய வணிகங்களில் உழைக்கும் இலாபத்தை நிறுவனத்திற்கு வங்குதல் வேண்டும்.

*Pillans Brothers vs Pillaws*

இங்கு கமல் அவன் மனைவியுடன் உழைத்த இலாபம் அனைத்தையும் பிமலுக்கு வழங்குதல் வேண்டும்.

**(06 புள்ளிகள்)**

(b)

**பங்காளர்களின் உரிமைகளும், கடமைகளும்**

பங்குடைமையின் உரிமையும் கடைமையும் பங்குடைமை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். பங்குடைமை ஒப்பந்தமானது எழுத்து மூலமாகவோ அல்லது வாய் மொழி மூலம் மேற்கொள்ளப்படலாம். பங்குடைமை ஒப்பந்தமானது குறித்த விடயம் தொடர்பில் பங்காளர் உரிமை, கடமை தொடர்பில் எந்த விடயத்தையும் குறிப்பிடாவிடின், பங்குடைமை கட்டளைச்சட்டத்தின் 24ம் பிரிவு ஏற்புடையதாகும். இதன்படி பங்காளர்களின் உரிமைகளும், கடமைகளும் பின்வருமாறு

1. **பங்காளர் உரிமைகள்**

மூலதனம் மற்றும் இலாபம்

2. மூலதனம் இடப்படவேண்டியதோடு, இலாப நட்டமும் பகிரப்படும்.

இழப்பீடு:-

பங்குடைமை நிறுவனமானது பங்காளர்களில் செய்யப்பட்ட செலவுகளை மீள செலுத்துதல் வேண்டும்.

(a) சாதாரண நடவடிக்கைகளின் போதான செலவுகள்

(b) தன்னுடைய சொத்துக்களை நிறுவனத்திற்கு வழங்கியமை

3. **கடனுக்கான வட்டி**

பங்காளர் நிறுவனத்திற்கு வழங்கிய கடனிற்கு 5% குறையாத வருடாந்த வட்டியை செலுத்துதல் வேண்டும்.

4. **மூலதனத்துக்கான வட்டி**

பங்காளருக்கு மூலதனத்துக்கு வட்டி கிடையாது.

5. **பங்குடமை நிறுவனத்தின் முகாமைத்துவம்**

அனைத்து பங்காளர்களும் முகாமையில் ஈடுபட வேண்டியதோடு முகாமை கருமங்களுக்கு சம்பளம் கிடையாது.

6. **புதிய பங்காளர் ஒருவரை இணைத்தல்.**

நிறுவனத்தில் இருக்கும் அனைத்து பங்காளர்களின் சம்மதமின்றி புதிய பங்காளரை இணைக்க முடியாது.

7. **சாதாரண விடயங்கள் தொடர்பான மாற்றங்கள்**

சாதாரண விடயங்கள் அதிக வாக்குகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதோடு, வாக்குகள் சமனாயின் புதிய மாற்றங்களை ஏற்படுத்த முடியாது.

**8. பங்குடமை கணக்கு புத்தகங்கள்**

பங்குடமை நிறுவனத்திலேயே பங்குடமை கணக்கு புத்தகங்கள் பேணப்படல் வேண்டும்.

**9. விலக்குதல்**

ஒரு பங்காளரை விலக்கும் போது அனைத்து பங்காளரும் இணங்குதல் வேண்டும். ஒரு பொது விதியாக பெரும்பான்மை பங்காளர்கள் இணைந்து ஒரு பங்காரரை விலக்கமுடியாது. ஆயினும் ஒப்பந்தத்தில் பெரும்பான்மையினருக்கு அவ்வுரைமையை வழங்க முடியும். ஆயினும் இந்த அதிகாரம் நல்லெண்ணத்தில் இருத்தல் வேண்டும்.

**பங்காளரின் கடமைகள்**

1) உண்மையான கணக்குகளையும், தகவல்களையும் சமா்பித்தலுக்கான கடமை.

தாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் கொடுக்கல் வாங்கல் தொடா்பில் ஏனைய பங்காளருக்கு கணக்கறிக்கைகளை சமா்பித்தல் வேணடும்.

2) தனிப்பட்ட இலாபம் தொடா்பிலான பொறுப்பு தான் பெறும் அனைத்து நலன்கள் தொடா்பிலும் பங்காளா்கள் வெளிப்படுத்தல் வேண்டும்.

(A) நிறுவனத்தோடு தொடா்ா்டைய ஏதேனும் கொடுக்கள் வாங்கள்.

(B) பங்குடமை சொத்துக்களை தனது தேவைகளுக்காக பயன்படுத்தும்போது.

(C) நிறுவனத்தின் பெயா் மற்றும் நிறுவனத்தோடு இணைக்கவல்ல / தொடா்புடைய விடயங்கள்.

3) வணிகத்தோடு போட்டியிடும் வணிகத்தை தொடங்காதிருப்பதற்கான கடமை.

ஏனைய அனைத்து பங்காளா்களின் சம்மதமின்றி குறித்த பங்குடமையை ஒத்த, அதே தன்மையுடைய வணிகத்தை ஆரம்பிக்க கூடாது என்பதோடு அவ்வாறு வணிகத்தை நடாத்தி இலாபம் உழைத்தால் அதனை பங்குடமையாக்கி வழங்குதல் வேண்டும்.

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**பிரிவு *C* இன் நிறைவு**

## பகுதி - D

**கட்டாய வினா**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

## வினா 10ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**(a)**

i) ஒப்பந்த சட்டத்தின் கீழ் குமாருக்கும் அவனது பாட்டனுக்கும் இடையில் இடம்பெற்ற ஒப்பந்தம் வீட்டு ஒப்பந்தமாகும். வீட்டு ஒப்பந்தங்கள் நண்பர்கள் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினருக்கிடையில் ஏற்படுத்திக்கொள்ளும் ஒப்பந்தங்களாகும். இங்கு பொதுவான எடுகோள் யாதெனில் கட்சிக்காரர்களுக்கு இடையில் ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கான எண்ணம் இல்லை என்பதாகும்.

இங்கு தரப்பட்டுள்ள நிகழ்வில் பாட்டனின் துலங்கல் உணர்வு யாதெனில் "இது உம்மை ஊக்குவிக்கவே ஆகும் உனக்காக நான் ஒரு BMW காரினை கொள்வனவு செய்வேன் என நினைக்கிறாயா ? என்பது இங்கு பாட்டனுக்கு ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கான எவ்வித எண்ணமும் பாட்டனுக்கு இல்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

***Balfour Vs Balfour***

ஆகவே குமார் தனது பாட்டனிடமிருந்து BMW காரை பெற உரித்துடையவரல்ல.

**(07 புள்ளிகள்)**

(ii) இங்கு தரப்பட்ட நிகழ்வின்படி ஒரு பராயமடையாதவருடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்த சட்டத்தின்படி பராயமடையாதோரோடு மேற்கொள்ளும் ஒப்பந்தம் வலிதானது காரணம் பராயமடையாதோருக்கு ஒப்பந்த தகமை இல்லை.

இங்கு 18வயதிற்குட்பட்ட எவரும் பராயமடையாதோராக கருதப்படுவதே அவரது நிலையில் அது வெறிதாக்கப்படலாம்.ஆகவே இத்தகைய ஒப்பந்தங்களில் பராயமடையாத ஒருவர் தாம் ஒப்பந்தத்தில் பிணைக்காமல் இருப்பதற்கான உரிமை உண்டு. ரவி தனது மாமியுடன் தனக்கு 13 வயதாக இருக்கும்போது ஒரு ஒப்பந்தத்தில் ஈடுபட்டார். ஆகவே 13வயது என்பதைக்கொண்டு இவ்வொப்பந்தம் வலிதானதன்று / வெறிதாக்கப்படலாம் என வாதிடலாம் ஆகவே ரவி ஒருவருட சம்பளத்தை செலுத்த வேண்டியதில்லை.

**மாற்று விடை**

மேலும் ரவி இதன்மூலம் நன்மை பெறும் ஒப்பந்தம் என்பதால் "நன்மை தரும் ஒப்பந்தம் என்பதன் கீழ்" ஒருவருட சம்பளத்தை செலுத்த வேண்டும் என்ற வாதமும் உள்ளது.

***AG Vs. Costa***

**(07 புள்ளிகள்)**

b)

i) முகவராண்மை சட்டத்திற்கு அமைவாக சிரி முதல்வராவார். பாலா முகவராவார் சிரி முகவராண்மையை வெளிப்படையான ஒரு கடிதம் மூலம் அதிகாரத்தை வழங்குவதனூடாக உருவாக்கியுள்ளது.

முகவராண்மை சட்டத்தின்படி முதல்வர் நிபந்தனையை முகவர் பின்பற்ற வேண்டும் மேலும் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை தாண்டி முகவர் செயற்படக்கூடாது.

இங்கு வெளிப்படையாக வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பாலா பின்பற்ற தவறியுள்ளார் அதாவது கடனுக்கு பொருட்களை கொள்வனவு செய்யக்கூடாது என்ற மீறியுள்ளதோடு தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அப்பால் சென்றுள்ளார்.

ஒரு முகவரான இவர் இரகசிய இலாபம் உழைக்கக்கூடாது ஆயினும் பாலா ஒரு பண்ணை மூலம் மாதாந்தம் 100000/- உழைத்துள்ளார்.ஆகவே இவர் தனது கடமைகளை மீறியுள்ளார்

முகவராண்மை சட்டத்தின்படி பாலா கடமைகளை மீறியுள்ளார்.

ii) முகவராண்மை சட்டத்தின்படி ஒரு முகவர் முதல்வர் வழங்கும் அறிவுறுத்தல்களை / நிபந்தனைகளை பின்பற்றுதல் வேண்டும்.

இங்கு சிரி வெளிப்படையாகவே கடனுக்கு பொருட்களை கொள்வனவு செய்வதிலிருந்து பாலாவை தடுத்துள்ளார். ஆயினும் பாலா கடனுக்கு பொருட்களை கொள்வனவு செய்தமையானது தனது அதிகாரத்தை மீறி செயற்பட்டமையை காட்டுகிறது.

ஆகவே பெரேரா சிரியிடமிருந்து குறித்த பணத்தை பெறலாம் என்பதோடு பாலாவிடமிருந்து பணத்தைப்பெற நடவடிக்கை எடுக்கலாம். பாலா இப்பணத்தை சிரிக்கு செலுத்த வேண்டிய கடப்பாட்டை கொண்டுள்ளார்.

**(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**பிரிவு *D* இன் நிறைவு**

***Notice :***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers".
The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designed especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2017 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*
*All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*